# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ     அதிவிசேஷமானது

අංක 1712/13 - 2011 ජුනි 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.06.30

***1712/13 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை***

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

**அறிவித்தல்**

*மக்கட்தொகை, புள்ளிவிவரவியல் பணிப்பாளர் நாயகம் திமிங்கு படதுருகே பிரியந்தி சுரஞ்சனா வித்தியாரத்ன ஆகிய நான், 1944 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 3 ஆந் தேதிய 9,327 ஆம் இலக்க, 1949 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆந் தேதிய 9,963 ஆம் இலக்க, 1953 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் தேதிய 10,541 ஆம் இலக்க,1958 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் தேதிய 11,568 ஆம் இலக்க, 1962 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் தேதிய 13,179 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரமாகிய அறிவித்தல் மூலம் அமைச்சரவர்களால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 20 (2) (ஈ) ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தகைமைவாய்ந்த அதிகாரி என்ற வகையில் அவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தொழில்கள் ஒவ்வொன்றிலுமுள்ள தொழிலாளர்களுக்குப் பொருந்துவதான 2011 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கான வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் (2006/07 ஆம் ஆண்டின் அடிப்படையில்) 151.2 ஆகுமென இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

**டி. பி. பீ. எஸ். வித்யாரத்ன,**
மக்கட்தொகை, புள்ளிவிவரவியல்
பணிப்பாளர் நாயகம்.

மக்கட்தொகை, புள்ளிவிவரவியல் திணைக்களம்,
த.பெ.இல. 563,
கொழும்பு 07,
2011.06.30.

**அட்டவணை**

(1) கொக்கோ, ஏலக்காய், மிளகு வளர்த்தல், உற்பத்தித் தொழில்.

03-932/1

---

**கொக்கோ, ஏலம், மிளகு பயிரிடுதல், உற்பத்தி செய்தல் தொழில்களிலுள்ள வேலையாட்களுக்கு வழங்கப்பட வேண்டிய விசேட படிகள்**

*2011 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் மேற்கூறிய தொழில்களுக்கான வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் 151.2 ஆக இருப்பதால் 2011 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் சாதாரண வேலை நாளொன்று தொடர்பாகச் செலுத்தப்படவேண்டிய விசேட படி பின்வருமாறாகும் என (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 20 (2) (ஆ) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

**கொக்கோ, ஏலம், மிளகு பயிரிடுதல், உற்பத்தி செய்தல் தொழில்கள்**

| தொழிலாளர் வகுப்பு | சாதாரண வேலை நாளொன்றுக்கான விசேட படி |
|---|---|
| நாளாந்த வேதனம் பெறும் ஊழியர்கள் | ரூ. ச. |
| தொழிலாளர்கள் - ஆண்/பெண் | 440.65 |

**வி. பீ. பீ. கே. வீரசிங்க,**
தொழில் ஆணையாளர்.

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 05,
2011.06.30.

03-932/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.